

தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட மகளிர் அணி சார்பில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு,பாதுகாப் பின்மை,விலைவாசி உயர்வைக் கண்டித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி., மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் செல்வி.ரோஜா கண்டன உரையாற்றினார்.உடன் தடங்கம். பெ.சுப்ரமணி,தருமசெல் வன்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் முத்துலக்ஷ்மி,கவிதா மோகன்தாஸ்,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர கழகத்தினர் மற்றும் சார்பு அணியினர் உள்ளிட்ட ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு த வெ க அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

மகேஸ்வரி, அனிதா தலைமை! நெல்லை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

முத்துச்செல்வி கண்டன உரை! இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வஹாப் – ம.கிரகாம்பெல் பங்கேற்பு!

நெல்லை. நவ.2.–

சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண் கள் குழந்தைகள் பாதுகாப் பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து ஒருங்கி ணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டன முழக்கம் மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர் மகேஸ்வரி தொண்டரணி அமைப்பாளர் அனிதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ச. முத்துச்செல்வி பங்கேற்று த.வெ.க.அரசை கண்டித்து கண் டன உரையாற்றினார்.முன்னதாக நிகழ்வில் சட்டப்பேரவை முன் னாள் தலைவர் மு.அப்பாவு, ஒருங் கிணைந்த நெல்லை மாவட்ட பொறுப்பாளர்கள் இரா.ஆவுடை யப்பன் (மேற்கு) மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.(மத்திய) ம.கிர காம்பெல் (கிழக்கு) ஆகியோர் பங் கேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தனர்.நிகழ்வுக்கு மக ளிரணி நிர்வாகிகள் கோபாலசமுத் திரம் பேருராட்சி தலைவியும் மாவட்ட துணைச் செயலாளரு மான தமயந்தி,வி.கே.புரம் பேரூ ராட்சி கவுன்சிலர் ராமலட்சுமி செல்வகுமாரி,தாமரைச் செல்வி, பிரேமா, ரேவதி அசோக்,மேகலா, மகளிரணி தலைவர் சந்திரகலா ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி. எம். மைதீன்கான், ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன்,முன்னாள் எம்பி,

சா.ஞானதிரவியம்,மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர் மன்,மைக்கேல்,தலைமை செயற் குழு உறுப்பினர் சித்திக், பொதுக் குழு உறுப்பினர்கள் பரமசிவ அய்யப்பன், நடராஜன்,மாநில தொண்டரணி துணைச் செயலா ளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித் தன், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர்ராஜாமுகம்மது,மாவட்ட அவைத்தலைவர் முருகன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழ கன், போர்வெல் கணேசன், கண் ணன், செல்வ கருணாநிதி,ராஜன், ஜோசப்பெல்சி,சுபாஷ் தங்கப் பாண்டியன் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வசூடாமணி, பிரேம்குமார், வில்சன் மணித்துரை, கிழக்கு மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பி னர் அனுராதாரவிமுருகன்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தவசிராஜன்,பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங் கர்,துபை சாகுல், செய்யது முகை தீன், நமச்சிவாயம் மாநகர துணைச் செயலாளர் பிரபு பாண்டி யன், வல்லநாடு முத்து, மாமன்ற

உறுப்பினர்கள் உலகநாதன், சுந்தன் சுப்புலட்சுமி குணா, சுந்தர், அலிஷேக்மன்சூர்,இந்திராமணி, மேரி எட் வர்ட் ஜான்,வட்டச் செய லாளர்கள் பேபி கோபால், மேகை செல்வம்,மாவட்ட பிரதிநிதி சமூக முரளி மற்றும் பேரங்காடி ஜெயப் பன்,நம்பிராஜன்,சரஸ்வதி செல்வ சங்கர்,சங்கரலிங்கம், நாகூர் பிச்சை, கோபால்தாஸ், வீரபாண்டியன், சண்முக சுந்தரம், கவிஞர் மூர்த்தி, ஆவரைக்குளம் முருகன் உள்பட மகளிர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் என ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்ட னர்.

நிகழ்ச்சி நிறைவில் மகளிர் அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகி கள் ஒன்றாக த.வெ.க. அரசை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

கொளுத்தும் வெயிலை பொருட்படுத்தாது இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

கேரள மாநில தி.மு.க.

முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ரகுபதி மறைவு!

கே.ஆர்.முருகேசன் – முன்னணியினர் இறுதி அஞ்சலி!

திருவனந்தபுரம், நவ.2-

கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் தற்போதைய கேரள மாநில தி.மு.க. பொறுப்புக் குழு உறுப்பினருமான ஆர்.ரகுபதி(83) அவர்கள் வயது மூப்பு காரணமாக நேற்று (01.11.2026) காலை 3 மணியளவில் திருவனந்த புரம் கரமனை தனது இல் லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரது இறுதிச் சடங்கு இன்று காலை 9 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம் காலை 10 மணியளவில் இல்லத்தில் இருந்து புறப்பட்டு சாந்தி கவாடம் சென்றடைகிறது. அங்கு இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன.

கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழக அமைப் பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் மற்றும் கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பலர் அன்னாரது உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி னர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டி.என். பாபு (எ) இளவழகன்

நவம்பர் 2 (2003)



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

மேலும் ஒரு அக்டோபர் எழுச்சி!

கணையாழி தலையங்கம்

அக்டோபர் புரட்சி
வரலாற்றின் கொண்டாட்டம்!

அக்டோபர் எழுச்சி
தமிழின் கொண்டாட்டம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர்
தமிழ் மொழியைச் செம்மொழி என்று
ஒன்றிய அரசால்
அறிவிக்கச் செய்த நாள்
அக்டோபர் 12, 2004!

இந்திய மொழிகளில் மட்டுமில்லை
உலக மொழிகளின் வரலாற்றில்
ஒரு மொழி
அரசால் செம்மொழி என்று
முதன்முதலாக
அறிவிக்கப்பட்ட பெருமை
தமிழுக்கு உரியது!

அறிவிக்கப்பட்ட மாதம்
அக்டோபர்!

கனடாவில்
"செய்யறிவு உலகில்
செம்மொழி" மாநாடு
நடந்ததும் அக்டோபர் மாதம்!
இது செம்மொழியும் செய்யறிவும்
கைகோர்த்த மாதம்!

தொன்மையும் நவீனமும்
தோழமை கொண்ட மாதம்!

உலகத் தமிழர்களை
அறிவாலும் ஆய்வாலும்
ஒருங்கிணைத்த மாதம்!
இதுவரை நடந்த மாநாடுகள்
தமிழைப் பற்றிச் சிந்தித்தன.
இந்த மாநாடு
தமிழர்களைப் பற்றியும் சிந்தித்தது.

குறிப்பாகக்
கனடாவில் பிறந்து வளரும்
மூன்றாவது தலைமுறை
ஈழத் தமிழர்களின் பண்பாட்டு எதிர்காலம்
கவனத்தில் கொள்ளப்பட்டது!

தன் வாழ்வைச் சீரழித்த பீஷ்மரை
ஒரு பிறவியில் முடியவில்லை
எனினும்
மறுபிறவி எடுத்துப் பழி தீர்த்த
மகாபாரத அம்பையையும்
மாநாட்டிற்கு
நார்வேயிலிருந்து அழைத்து வந்திருந்தார்
கவிதா லட்சுமி!

மறைமலை அடிகள்
தனிநாயகம் அடிகள்
ஜி.யு. போப்
தமிழறிஞர்கள் படங்களாகவும் பாடங்களாகவும்
பங்கேற்றனர் மாநாட்டில்!

தனித்தமிழ் இயக்க முன்னோடி
மறைமலை அடிகளின்
150ஆவது பிறந்த நாள்
மறக்காமல் கொண்டாடப்பட்டது.

திருவள்ளுவருக்குப்
பிறந்தநாள் சான்றளித்தவர்!

தமிழ் இலக்கியங்களில்
தொல்காப்பியத்திலும் கூட
உலகம் இருக்கிறது.
வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்தைப்
பனம்பாரனார் பாயிரம் சொல்கிறது!

ஆனால்
சுதந்திரம் அடைவதற்கும் முன்பே
அடைந்து விட்டோம் என்று
ஆடிப் பாடிய பாரதியார்
ஒரு மாநிலம் கூடத்
தமிழ்நாடு என்று இல்லாத காலத்தில்
1916 ஜூன் ஜூலையில்
'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே' என்று
பாடியிருக்கிறார்!



1919இல்
மறைமலை அடிகளின்
தமிழ்நாடு கோரிக்கை
48 ஆண்டுகளுக்குப் பிறகு
1967இல் அறிஞர் அண்ணாவால்
நிறைவேறியிருக்கிறது.

இப்போது
கனடாவின் தோரண்டோ
தமிழ்நாட்டை நினைவுபடுத்துகிறது!

மறைமலை அடிகளின்
வாழ்க்கை வரலாற்றை
அவரது மகன்
மறை திருநாவுக்கரசு
அச்சில் கொண்டுவர
1959இல்
நன்கொடை வழங்கியவர்கள்
ஈழத் தமிழர்கள்!

மறைமலை அடிகள்
பல்லாவரம் வீட்டைக் கட்ட
நன்கொடை வழங்கியிருப்பவர்கள்
ஈழத் தமிழர்கள்!

கனடாவில் தோரண்டோவில்
உலகத் தமிழ் ஆய்வு மாநாடு
நடத்திய உலகத் தமிழர் பேரவை
ஈழத் தமிழர்களின் முன்னெடுப்பு!

குடும்பம் குடும்பமாகத்
தமிழர்கள் கூடியிருந்தார்கள்!

இனி வரும் காலங்களில்
உலகத் தமிழர்களை ஒற்றைப் புள்ளியில்
ஒருங்கிணைக்கும் முயற்சியைத்
தொடங்கியிருக்கும்
இந்த மாநாடு சிறப்புற
வாழ்த்துரை வழங்கியிருக்கிற
தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களையும்
எதிர்க்கட்சித் தலைவர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
தொடக்க விழாவில்
மாநாட்டுக் குழுத் தலைவர்
நிமால் விநாயக மூர்த்தி
நன்றியுடன் குறிப்பிட்டார்.

கோவையில் 2010இல் நடந்த
செம்மொழி மாநாட்டை நினைவுபடுத்திய
இந்த மாநாடு
செம்மொழி அறிவிப்பு வந்த
அக்டோபரில் நடந்ததால்
கொண்டாடலாம்.

இது
தமிழுக்கு
மேலும் ஒரு அக்டோபர் எழுச்சி!



அன்புடன்
ம.ரா.

நன்றி : கணையாழி
நவ.2026